**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 31/2024**

**நாள்: 29.04.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 6 (LW5)

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருப்புசாமி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A2, A4, A7, A9, A11, A12, A13, A15 ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இராமேஸ்வரம் அரசு பேருந்து பணிமனையில் Foreman ஆக பணிபுரிந்து 31.05.2016ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் சேத மதிப்பீடு சான்றிதழ் நான் வழங்கியது தான். கடந்த 30.10.2015ம் தேதி இராமேஸ்வரம் அரசு பேருந்து பணிமனை கிளை மேலாளர் என்னிடம் வந்து, தேவர் குருபூஜைக்கு சென்ற TN 63 N 1460 என்ற அரசு பேருந்து சேதம் ஆகி வந்துள்ளது என்றும், அதனை ஆய்வு செய்து சேத அறிக்க கொடுக்கும்படி என்னிடம் பணித்தார். நான் அந்த வாகனத்தை ஆய்வு செய்த அதில் இருந்த சேதாரத்தின் விவரங்களை குறிப்பிட்டு அறிக்கை கொடுத்தேன். அதற்கான சேத மதிப்புகளை மேலாளர் குறித்து என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார். நான் கொடுத்த **சேத மதிப்பு சான்றிதழ் அ.த.சா.ஆ.3** ஆக



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.29 17:45:29 +0530

தற்பாது குறியீடு செய்யப்படுகிறது.  ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

பேருந்திற்கு ஏற்பட்டிருந்த சேதம் எப்போது, எங்கே, யாரால் ஏற்படுத்தப்படுத்தப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எனது மேலதிகாரி சொன்னதால் நான் அ.த.சா.ஆ.3 வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.29 17:45:31 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .